
# போர்வாள்


...திராவிடர் வார வெளியீடு...


| வாள் | திருவள்ளுவர் ஆண்டு 1979 பங்குனி 14 | வீச்சு |
|---|---|---|
| 1 | 27-3-48 சனிக்கிழமை | 32 |


ஆசிரியர்கள்:




" வீர உரிமை உணர்வால் தான் **தோழர் அண்ணாதுரை** இன்று இளைஞர் உள்ளங்களைக் கவர்ந்துள்ளார். தன்னைவிடச் செல்வாக்கு உடையவர்களையோ செல்வம் பெற்றவர்களையோ கண்டு மதித்துப் போற்றுவதும் அவரிடம் காணமுடியாது. தன்னைவிடச் செல்வம் செல்வாக்குக் குறைந்தவர்களையோ அறிவாற்றல் குறைந்தவர்களையோ கண்டு இகழ்ந்து ஒதுக்குவதும் அவரிடம் காணமுடியாது. அதனால்தான் வெளிப்படையான உள்ளமும், அஞ்சர்மை உணர்வும், புதுமைச் சிந்தனையும் அவருக்கு இயல்பாக அமைந்துள்ளன."



—மு வரதராசனார்.

# தர்மம் செய்வது அக்கிரமம்

[பெரியார் ஈ வெ; ரா.]

**[தலைப்பைக் கண்டதும் அஞ்சி நடுங்காதீர்கள்! என்னவோ ஏதோ என்று எண்ணி திகைப்படையாதீர்கள்! தர்மம் செய்வது அக்கிரமம்! ஆம்! அப்படித்தான் சொல்கிறார் பெரியார்! என்ன நெஞ்சழுத்தம் என்பீர்கள்! என்ன துடுக்கு என்று சொல்லவும் துணிவீர்கள். துணிவது இருக்கட்டும் பிறகு; கட்டுரையைப் படியுங்கள் முதலில். காரணம் விளங்கும். திகைப்பும் தீரும்.]**

தர்மம் அதாவது ஏழைகளுக்குப் பிச்சை இடுதல் என்பதைப்பற்றி எல்லா மதங்களுமே முறையிடுகின்றன.

இந்து, முஸ்லீம், கிறிஸ்தவம், முதலிய மதங்களில் இந்த தர்மத்தை-பிச்சை கொடுத்தலை மிக நிர்ப்பந்தமாக கட்டாயப்படுத்தி சொல்லப்பட்டிருக்கிறது.

எப்படி எனில் தர்மம் கொடுக்காதவன் பாவி என்றும், அவன் நரகத்துக்குப் போவான் என்றும், கடவுள் அவனைத்தண்டிப்பார் என்றும் இப்படியெல்லாம் பயமுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. இவை கடவுள் வாக்கெனவும் கூறப்பட்டிருக்கிறது.

இந்து மதம் என்பதில் தர்மத்தை 32 விதமாகக் கற்பித்து 32 தர்மங்களையும் ஒருவன் செய்ய வேண்டும் என்றும், அந்தப்படி செய்தால் அவனுக்கு இன்ன இன்ன மாதிரி புண்ணியம் கிடைக்கும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதாவது, அறம் 32 என்றும் சத்திரம், படிப்பவர்களுக்குச் சாப்பாடு, பக்தர்களுக்கு உணவு, பசுவுக்கு வாயுறை, கைதிகளுக்குச் சாப்பாடு, இரப்பவர்களுக்குப் பிச்சை, தின்பண்டம், அநாதைகளைக் காத்தல், பிள்ளைப்பேறுக்கு மருத்துவம் செய்தல், அனாதைப் பிள்ளைகளை வளர்த்தல், பிள்ளைகளுக்குப் பால் வார்த்தல், அனாதைப் பிணம் சுடுதல், ஏழைகளுக்கு ஆடை கொடுத்தல், வழிப்போக்கர்களுக்குச் சுண்ணாம்பு கொடுத்தல், வைத்தியம் செய்தல், வண்ணான் உதவல், நாவிதன் உதவல், கண்ணாடி காட்டுதல், காதோலை கொடுத்தல், கண்ணுக்கு மருந்து செய்தல், தலை முழுக்காட்ட எண்ணெய் தருதல், பெண்போகம் வேண்டுவோருக்குப் போகப் பெண் உதவுதல், கஷ்டத்தில் சிக்குண்டவர்களுக்கு உதவி செய்து விடுவித்தல், தண்ணீர்ப் பந்தல் வைத்தல், மடம் கட்டுதல், ரோட்டுப்போடுதல், சாலை மரம் வைத்தல், மாடு எருமை ஆகியவை தங்கள் தினவுகளைத்தீர்த்துக் கொள்ள சொறிகல் நடுதல், மிருகங்களைக் காத்தல், கக்கூசு கட்டல், விலை கொடுத்து உயிர் மீட்குதல், பெண் தானம் செய்தல். ஆகிய 32 தர்மங்களையும் செய்யவேண்டியது ஒவ்வொரு மனிதனின் கடமை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

அதுபோலவே இஸ்லாம் மதம் என்பதிலும் அன்னியனுக்கு பிச்சை கொடுத்தாக வேண்டும் என்றும், அது ஒருவனுடைய வருஷவரும்படியில் அவனது செலவு போக மீதி உள்ளதில் 40ல் ஒரு பாகம் வருஷந்தோறும் பிச்சையாக—பணம், சாப்பாடு துணி முதலியவைகளாகக் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப்படி செய்யா விட்டால் மதத்துரோகம் என்றும் இந்தப்படி செய்யாதவன் இஸ்லாம் ஆக மாட்டான் என்றும் கூட கூறப்படுகிறது.

அதுபோலவே கிறிஸ்தவ மதத்திலும் தர்மம் கொடுக்கவேண்டியது மிக முக்கியமானதென்றும், தர்மம் செய்யாதவனுக்கு மோட்சமில்லை என்றும், உதாரணமாக ஒரு ஊசியின் காதோட்டை வழியாக ஒரு ஒட்டகம் நுழைந்தாலும் நுழையுமே ஒழிய பிச்சை கொடுக்காத பணக்காரன் ஒரு காலமும்

மோட்சத்துக்குப் போகமாட்
என்றும் சொல்லப்படுகிறது

இந்தப்படிக்கு தர்மங்கள்
வேண்டிய அவசியங்களை
புறுத்தி, அந்த வறபுறுத்
பகவான் சொன்னான் ஆண்
சொன்னான் என்று வே
என்பவைகளிலும் எழுதி
கப்பட்டிருக்கின்றன.

இந்த தர்மங்கள் எல்லாம்,
கிறவர்கள் அதாவது செல்
கள் இல்லாதவர்களுக்கு—
ளுக்கு கொடுக்க வேண்டும்
பதுதான் இதன் தாத்பரிய

செல்வவான்களுக்குச் செ
கடவுளால் கொடுக்கப்பட்ட
ஆகையால் கடவுள் கொடு
கடவுளின் சிருஷ்டியாகிய-
ளின் பிள்ளைகளாகிய ஏழை
ளுக்குக்கொடுக்கவேண்டிய
சியமாகும் என்பதே அந்த
யத்தின் உள்கருத்தாகும்.
வான்களுக்கு கடவுள் செ
ளைக் கொடுத்தார் என்றால்
மில்லாத ஏழை தரித்தி
களுக்கு செல்வமில்லாமல்
த்து கடவுள் தான் என்பதை
மதவாதியும், ஆஸ்திகனும்
மாட்டான் என்றும், மறுக்
யாது என்றும் சொல்லுவே

செல்வம் என்பது உல
பொது சொத்து.
யார் உண்டாக்கியிருந்தாலு
கத்தில் உள்ளவரை அந்த
கும் அது பொது சொத்
ஆனால் அந்த பொது சொத்
பலாத்காரத்தாலும், சூழ்
லும், ஆட்சியாலும், கடவு
லும் ஒருவனுக்கு அதிகமாய்
சேரவும் மற்றொருவனுக்கு
கூட இல்லாமல் தரித்திர
முதலியவை அனுபவிக்கவு
தன்மை உண்டாக்கப் ப
ஒழிய மற்ற எந்தக் கார
லும் எவனுக்கும் இல்
போக நியாயமே இல்லை.

ஆன போதிலும் கடவு
வனை செல்வவானாக

(11-ம் பக்கம் பார்க்க

# கேட்டோம்! கேட்கிறோம்!

**ராய்ச்சிகளால் மயங்காமல்**
**வைதரும் சண்டையில் தயங்காமல்**
**ராய்க் கம்பனைப் படிப்பவரே**
**சயம் கவிரசம் குடிப்பவராம்!**

உண்மைதானே! எளியவழி ஓர் இருக்க வேறுவழி புகுவா ன்? ஆராய்ச்சி முறையில் பன் காதையைத் துருவித்துரு ப்பார்ப்பானேன், பின்னர், ஆரி ன உயர்த்தி இருக்கிறது; தமிழ த் தாழ்த்தி இருக்கிறது என்று ந்து கொள்வானேன்? இரா யணத்தை ஆராய்ந்தால் அதுஒரு த்துக்கொரு நீதி வகுப்பது றுதான் தோன்றும். இராமா ணத்தை ஆராய்ந்தால் பார்ப்ப ர தவம் செய்தற்கு உரியர் றையோர் அதற்கு அருகர் அல் என்ற கம்பநீதிதான் புலப் ம். இராமாயணத்தை ஆராய்ந் "பிராமணர்கள் பூதேவர் , அவர்கட்குத் தானதருமம் ய்தல் மக்கள் கடமை மட்டு று, ஆண்டவனின் கடமையும் ம்" என்று கம்பன் ியதாகத்தான் காணப்படும். ாமாயணத்தை ஆராய்ந்தால் ன் தலைசிறந்த புலவன் என்ற க்கை ஆட்டங் கொடுத்து ம். இராமாயண ஆராய்ச்சி ன் ஓர் இனத்துரோகி என் எடுத்துக் காட்டிவிடும். அந்த ய்ச்சி கம்பன்மீது நமக்குள்ள த்தைக் கலைத்துவிடும். கம்ப தைப் பருகுவதில் நமக்குள்ள த்தை போக்கிவிடும். இராம த் தமிழர் இன எழுச்சிக்கு பட்டதா என்ற மயக்கத்தை ந்துவிடும். நமக்கு ஏன் அந்த ய்ச்சி? கலைநயம் தெரியாத ் பாகம் பருகாதவர்கள் ச் க. ம. க்கள் அல்லவா ய்ச்சி என்று அலைவார்கள். கெதற்குப் பயன்படும் அந்த ய்ச்சி? நாம் கவி படிப்போம், ிரிப்போம், சுவை தெரிப் , சிரம் அசைப்போம். பிற லை ஏன்? கம்பன் தன் உட உயிருருக உள்ளமுருக உணர்வுருக அமைத்த உயிரோவி யத்தின் அழகில் ஈடுபடுவோம். கம்பன் தரும் காட்சியில் மனதைச் செலுத்துவோம். அதுவே நாமா வோம், நாமே அதுவாவோம்-ஆமாம், ஆராய்ச்சி வேண்டாம்; அறிவுத் தெளிவு வேண்டாம்; நடு நிலை உள்ளம் வேண்டாம், நேராய்க் கம்பனைப் படித்திடு வோம். நிச்சயம் கவிரசம் குடித் திடலாம்............

என்ன தோழரே! பேச்சும் பாட்டும் பெருநீளமாயிருக்கிறதே என்று என்னைக் கேட்கிறீர்களா? என்னைக்கேட்டு என்ன பயன்? நான்மேலே தீட்டியுள்ள கருத்து கம் பதாசர்களுடையது; பாட்டு, தேசி யக் கவிஞர், கத்தியின்றி இரத்த மின்றி யுத்த மொன்று வருகுது என்று பண்பாடிப் புகழ் பெற்ற வர், நாமக்கல்வாசி வெ. இராம லிங்கம் பிள்ளை அவர்களுடையது. இராமாயண ஆராய்ச்சி கம்பன் மீதுள்ள பற்றைப் போக்கிடும், மயக்கத்தை ஊட்டிடும் என்று அவர் கூறுகிறார்.

அறிவும் ஆராய்ச்சியும் பெருக வேண்டும்—உண்மை என்னும் உரை கல்லில் எதனையும் உரைத் துப் பார்க்க வேண்டும்—சிந்தனைத் தராசில் எடை போட்டுப் பார்த்து உண்மை நிறையை உணர்ந்த பின்னரே எதனையும் ஒப்பவேண் டும் என்ற உயர் கருத்துக்கள் எங் கும் பரவிவரும் இந்த 1948ல் தான்-விஞ்ஞான காலத்தில்தான்—பகுத் தறிவு சகாப்தத்தில்தான், நாமக் கல்லார் நமக்களிக்கிறார் இக் கவி தையை.

நாமக்கல்லார், இக் கவிதையை, நாணம் என்பதின்றி நாட்டுக்கு அளிப்பது கூட அவ்வளவு வியப் பான சேதி அல்ல—அவர் பழமை எனும் குட்டையில் ஊறிய மட்டை; ஆகவே அவரிடமிருந்து அதைத் தான் எதிர் பார்க்க முடியும்—ஆனால் சென்னைப் பல்கலைக் கழ கம், இந்தக் கவிதையையும் இது போன்ற கட்டுரைகளையும் கொண்ட ஒரு தொகுப்பு நூலை—'கம்பன் கலை' என்ற பெயர் படைத்த நூலை--கல்லூரி மாணவர் கட்குப் பாடமாக வைத்துள்ள ளரே அதுதான் நம் உள்ளத்தில் வியப்புணர்ச்சியை மட்டுமல்ல, பரிதாப உணர்ச்சியையும் தூண்டு கிறது.

"ஆராய்ச்சி என்பது ஒரு மயக் கம்—அது நமக்குத் தருவதெல் லாம் வெறும் தயக்கம்" என்று ஒரு "கவிஞர்" கூறுவதும், அந்த "அரிய" கருத்துரையை ஒரு பல் கலைக் கழகம் பாட புத்தகமாக வைப்பதும், அந்தப் புத்தகத்தை தமிழ் நாட்டு வாலிபர்கள், கல்லூரி மாணவர்கள், பி. ஏ. வகுப்பில் படிப்பவர்கள், பயில்வதும் என் றால், இதைவிட இழிநிலை தமிழ் நாட்டிற்கு வேறு இருக்க முடியுமா என்பது நமக்குத் தெரியவில்லை.

கம்பன் காதை தனி சிறந்த நூல் என்று கூறட்டும், அதில் கவிச்சுவை இன்பம் கவின் பெற அமைந்துள்ள வகையை நிரல் நிரலே எடுத்து விளக்கட்டும், கோசலைச் செல்வனின் குணசித்தி ரங்களை எழுத்து எனும் சிற்றுளி கொண்டு எத்துணை எழில் பெற வேண்டுமானாலும் செதுக்கிக் காட் டட்டும், அவர்களின் அந்தப் பணி பயனற்றது என்றாலும் அவர்க ளின் எழுத்துத் திறமையைக் காட்டுகிறது என்ற அளவிலேனும் நாம் மகிழலாம். ஆனால் எந்தக் காரணம் கொண்டும், கம்பன் கவி தையை, **ஆராய்ச்சி செய்யாதே** என்று மட்டும் கூறவேண்டாம். அப்படி ஒரு தமிழன் கூறுவது, கூறுபவருக்கல்ல, தமிழ் நாட்டுக்கு அவமானம்.

தன்மான இயக்கத்தவராய நாம் வெகுகாலமாகவே கூறிவருகிறோம் இராமகாதை இனநலத்திற்கு ஊறு பயப்பது என்று. கம்ப இராமா யணம் ஆரியரை உயர்த்தவும் திரா விடரைத் தாழ்த்தவும் எழுந்த ஓர் காவியம். அந்த இராமாயணம் வீரத்தாற் பொலிந்த காப்பிய உறுப்பினரைக் கோழைகளாக் கிக் காட்டும். கோழைப் பாத்தி ரங்களைப் பெருவீரர்களாகத் தீட் டும். நேரிய செயல்களைக் கொடி யன என்றுரைக்கும். கொடுஞ் செயல்களை அறச் செயல்களாய் உருவகிக்கும். ஆரியர் மொழி யைத் தேவபாடை என்றும், ஆரி யர்களைத் தேவர்கள் பூசுரர்கள்

ஆண்டவன் மறுபிறப்புகள் என்றும் புகழும். தமிழர்களைக் குரங்குகள் என்றும் கரடிகள் என்றும் அஃறிணையில் அமைத்துக்காட்டும், இல்லையேல் இரக்கமென்ற ஒருபொருள் இலா அரக்கர் என்று இழித்துரைக்கும். இது கம்ப இராமாயண இயற்கை என்பதை நாம் பல ஆண்டுகளாக எடுத்துக்கூறி வருகிறோம்.

நாம் மட்டுமல்ல, புகழ்பெற்ற வரலாற்று அறிஞர்கள் அத்தனை பேரும் இதே கருத்தைத்தான் கொண்டிருக்கின்றனர். "வெற்றி பெற்றவர்களுக்கு இயற்கையாக ஏற்படும் செருக்கால் பார்ப்பனர்கள் தங்கள் பகைவராய தஸ்யூக்களை (திராவிடர்களை) குரங்குகள் என்றும் கரடிகள் என்றும் எழுதிவைத்தார்கள்"—இது **ஜோஷி சந்நாட்** என்னும் வரலாற்று ஆசிரியர் கூற்று. "இராமாயணக் கதையின் உட்பொருள் என்னவென்றால் ஆரிய நாகரிகத் தலைவன் இராமனுக்கும் திராவிட நாகரிகத் தலைவன் இராவணனுக்கும் நிகழ்ந்த போராட்டமேயாம்" என்று **இராத குமுத முகர்ஜி** தெளிவாகவே உரைக்கிறார். "இராமாயணம் ஆரியருக்கும் திராவிடருக்கும் ஏற்பட்ட போரை உணர்த்துவது. அதில் குரங்குகள் எனப்படுவது தென்னாட்டுத் திராவிடரே"—இது **பண்டித ஜவகர்லால்** 'தன் மகளுக்கு எழுதிய கடிதங்கள்' என்ற புத்தகத்தில் குறித்துள்ளது. வில்லியம் ஹண்டர் முதலிய மேனாட்டவரும் இராமேஸ் சந்திரடட் முதலிய வங்காள அறிஞரும் இதையேதான் கூறுகின்றனர். சுவாமி விவேகாநந்தர் கருத்தும் இது. மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை, ஆசிரியர் மறைமலை அடிகள், நாகர்கோயில் பி. சிதம்பரனார், மலபார் T. பொன்னம்பலம், முதலிய தமிழ்ப்பெரும் புலவர்களும் பி. டி. சீனிவாசய்யங்கார் போன்ற ஆரிய அறிஞர்களும் இக்கருத்தினையே வலியுறுத்தியுள்ளனர். இங்ஙனம் இராமாயண ஆராய்ச்சி ஐயப்பாட்டிற்கு இடமின்றிக் கூறுகிறது, கம்பன் ஓர் இனத்துரோகி, பழங்காலக் குடிலன், திராவிடக் குவிஸ்லிங் என்பதை. ஆகவேதான் போலும் நாமக்கல் கவிஞர் நமக்கெடுத்துக் கூறுகின்றார், ஆராய்ச்சிகளால் மயங்காதீர் அவைதரும் சண்டையிலே தயங்காதீர் என.

பாட்டு தொடர்கிறது, பாட்டுடன் பொருளற்ற புனைந்துரையும் தொடர்கிறது:—

"சாதியை மதங்களை மறந்திடவும்
சமரச உணர்ச்சிகள் நிறைந்திடவும்
நீதியை அறங்களை நினைப்பூட்ட
நிரந்தரக் களஞ்சியம் அவன் பாட்டு"

என்கிறார் கவிஞர். சம்புக வதம் ஒன்றே போதும் வர்ணாச்சிரம தருமத்தைத் தமிழகத்தில் நிலைநாட்ட எழுந்தநூலே இராமாயணம் என்பதை விளக்க! பார்ப்பனக் குழந்தை ஒன்று இறந்ததாம். அதற்குக் காரணம் சம்புகன் என்ற தமிழன் செய்த தவம்தான் என்று நினைத்தது மட்டுமல்ல அத்தமிழ் மகனை வெட்டி வீழ்த்துகிறான் இராமன். ஆரியன் மட்டுமே தவம்செய்யலாம்; தமிழன் செய்தல் ஆகாது என்னும் இக்குள்ளநரிக் கூற்றை—சூத்திரன் செய்யும்தவம் நாட்டிற்குக் கேட்டையே விளைவிக்கும் என்ற ஆரிய ஆணவத்தை—தமிழனாய்ப் பிறந்த ஒரு குற்றத்திற்காகச் சம்புகனின் உயிர்குடித்த இராமனின் கொடுஞ்செயலை எங்கேனும் கண்டித்ததுண்டா கம்பன்?

கண்டித்திருந்தால்—இராவணன் எல்லையில் இராமன் நுழைந்தது தவறு என்பதை எடுத்துக்காட்டியிருந்தால் — ஆரியரை எதிர்த்துப் போராடிய பெருவீரன் இராவணனின் பேராண்மையைப் பாராட்டி இருந்தால் — வேங்கைக் காட்டில் நரி ஆட்சியா என்று அவன் இட்ட வீரமுழக்கத்தைத் தன் கவிநலத்தில் பொருத்திக்காட்டி இருந்தால் கம்பனைப் புரட்சிக்கவி என்று பூரிப்புடன் புகன்றிருக்காதா தன்மானத் தமிழகம்! ஆனால் அதைச் செய்திலன் கம்பன். தன் இனநலத்திற்கே கேடுசூழ்ந்தான். அழியாத பழியையும் ஏற்றான்.

அத்துடன் நின்றனரில்லை நாமக்கல் கவிஞர். நீதியை அறங்களை நினைப்பூட்டும் நிரந்தரக்களஞ்சியம் அவன் பாட்டு என்று எக்காளமிடுகிறார். எத்தகைய நீதி கம்பனுடையது என்பது நாம் அறியாததா? பரதனுக்கே உரியநாட்டைதான் எடுத்துக்கொள்ள அவாவுறுகிறான் இராமன். இது ஒரு நீதி! பரதன் ஊரிலிருந்தால் அரசாட்சி என் பிறப்புரிமை என்று எங்கே முழங்குகிறானோ என்றெண்ணி

இளமை முதலே அவனைப்
டன் வீட்டிற்கு அனுப்பிவிடுகி
தசரதன். இது ஒரு நீதி! உ
கொலை வேள்வி ஏன் என்று
விய கரதூடணர்களைக் கெ
றான் இராமன். இது ஒரு
நின்பால் காதல் கொண்டே
என்றுரைத்த குற்றத்திற்க
சூர்ப்பனகையை மூக்கரிந்
றான் இராமன். இது மற்
நீதி! இத்தகைய (அ)நீதிகள் நி
திருக்கர்கூடிய கம்பராமாய
தில்—அறிவுக்குப் பொருத்த
நீதி ஒன்றேனும் உண்டா
பதேகம் கேள்வி.

அதுதான் போகட்டும், '
யம் மிளிர்வது கம்பன் செ
என்று நவில்கிறாரே நாம
இராமலிங்கனார், அது எந்த ஆ
தைக் கொண்டு? ஓர் அம்பு
மரத்தின் இலைகள் தே
புகுந்து, ஏழு உலகங்களு
புகுந்து, இராவணன் உட
புகுந்து மீண்டுவந்து இராம
அம்பறாத்தூணியில் ஏறிற்று
றும், ஒரு குரங்கு கடலைத்
டிற்று என்றும், ஒரு குரங்கு
யைப் பெயர்த்தெடுத்தது என்
ஒருவன் பத்துதலை இருபது
ளுடன் உலவினான், என்றும்
யோடு பர்ணசாலையைப் பெ
னன் என்றுமெல்லாம் கூறு
கம்பன். இதுதான் கம்பன் க
வாய்மை போலும்!

இனி இத்தனை கற்றிற்கும்
ரம் வைத்தது போல்" கூற
கவிஞர், "கம்பனை மறந்தால்
பேதது, கவிதை என்பதும்
பூாது" என்று- சிலப்பு த
சங்க இலக்கியத்தில், திரு
வர் குறளில், சீவக சிந்தாம
அகத்தில், புறத்தில், அதில்
அகப்பை அள்ளிக்கொண்
கம்பன். அதன் கூட்டுத்
தியே கம்ப இராமாயணம்
பதை அறிந்தும் கவிஞர் இப்
கூறுகிறாரே, இது ஏன்?

சுற்றிவளைத்துப் பேசுவானே
நாம் உரைப்பது இதுதான்.
செறிந்த—கற்பனை கள்
பொதிந்த உயிரோவியமாய்
கலாம் கம்ப இராமாயணம்.
திறம் நிறைந்த காவியமாய்
லாம் அந்த இராமகாதை. ப
திற்கு ஓர் எடுத்துக் காட்
பொலியலாம் அந்நூல். ப
டும் பைந்தமிழும் நிழலாட
பன் அமைத்திருக்கலாம் அ
யத்தை, இல்லை என்று நாம்

..ஆனால் அக் கலை இனக் ..லை புரிகிறது, அதைத்தான் .. கண்டிக்கிறோம். அற்புதச் ..திரமாய் இருக்கலாம் அவன் ..டு. ஆனால் அதன் அடிப்படை ..யர் உயர்வும் திராவிடர் தாழ்வு ..ய் அமைந்துளதே அது முறை ..என்பது நம் கேள்வி. ஒரு தமி.., அதிலும் தமிழ்ப்புலவன், ..லும் சிறந்த தமிழ்ப்புலவன் ..லும் மிகச் சிறந்த தமிழ்ப் புல.. ..தன் இனத்தவரை இழித்தும்

## நாடும் ஏடும்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

..வரால் மட்டுமே கூறப்பட்டு ..வாசகங்கள். சென்ற ஆண்டு ..ன் கம்யூனிஸ்ட் தோழரும் ..த்தொடங்கிய வாசகங்கள். ..ஷலிஸ்டுகளோ இப்போதுதான் ..த அறிவுரைகளை உணரத் ..டங்கி இருக்கின்றனர். பிற ..கு உரைக்கவும் தொடங்கி ..க்கின்றனர்.

..ந்தா நாள் நாம் இவற்றைக் ..யபோது நம்மைத் தாக்கிய ..த இரு கூட்டத்தினரும்தான் ..து இவற்றைப் பேசத் ..டங்கி இருக்கின்றனர். ஆனால் ..ளுவது, அவர்கள் இன்று உரை ..ம் உண்மைகளை நாம் முன் ..டியே உரைத்தோமோ என்ற ..ச்சியை எண்ணி, நம்மைப் ..ற்றுகின்றனரா? போற்ற ..டாலும் தூற்றுமலாவது இருக் ..றனரா? அது தான் இல்லை. ..றுகின்றனர். விடாது தூற்று ..றனர். தூற்றல் அகராதியைத் ..வித் துருவி வார்த்தைகளைத் ..த்தேடி எடுத்து நம்மைத் தூற் ..ன்றனர். அது குறித்து நாம் ..கவுமில்லை. ஏனெனில் இன்று ..உரைப்பதை அவர்கள் நாளை ..லது அதற்கடுத்த நாள் தானே ..ர முடியும்? எதையுமே காலம் ..த பிறது உணர்வது தானே ..ர்கள் வழக்கம்! குதிரை பறி ..ன பிறகு கொட்டிலை மூடும் ..யினர் தானே அன்னார்? அந் ..பண்பாட்டிற்கு மாறுபாடின்றி ..து கொள்கிறார்கள்! எப் ..யா, காலங்கடந்த பிறகேனும் ..மையை உணர்கிறார்களே. .. கம்யூனிஸ்ட்—சோஷலிஸ்ட் ..ர்கள், அதுபோதும் நமக்கு!

---

பழித்தும் பகைஞரை ஏற்றியும் போற்றியும் காவியம் கண்டுள்ளான். அருங்கலையே அது. ஆயினும் அவன் செயல் போற்றுதற்குரியதா என்பதே நம் முழக்கம். இனத்தைப் பழிக்கும் ஏட்டை நெருப்பிட்டுக் கொளுத்த வேண்டுமா இல்லையா என்பது வினா. மீண்டும் மீண்டும் நாம் கேட்கிறோம் இதே கேள்வியை.

இன்று, நேற்றல்ல, இருபத்தைந்து ஆண்டுகளாகக் கேட்கிறோம்; தன்மான இயக்கம் தமிழ்ப் பூந்தோட்டத்தில் தளிர்விட்ட நாள் முதலாய்க் கேட்கிறோம்; பண்டிதர்களைக் கேட்கிறோம்; பெரும் பெரும புலவர்களைக் கேட்கிறோம்; பழமைக் கோட்டையின் காவலர்களைக் கேட்கிறோம்; பெரும் பேராசிரியர்களைக் கேட்கிறோம்.

கேட்டோம்—கேட்கிறோம். நம் அன்பிற்குரிய நாவலர் பாரதியாரை ஐந்து ஆண்டுகட்கு முன் கேட்டோம்; இன்றும் கேட்கிறோம். நற்றமிழ் வல்ல மற்றோர் நாவலர் சேதுப்பிள்ளையையும் கேட்டோம்-கேட்கிறோம். பாரதியாரை, சேதுப்பிள்ளையை மட்டுமல்ல, கம்பனின் காதையில்பழுது ஏதுமில்லை என்று பரணிபாடும் பாவாணர்கள், நாவாணர்கள், புலவர்கள், தீரர்கள், தீவிர வாதிகள், ரசிக மணிகள், இலக்கிய கர்த்தாக்கள் எல்லோரையுமேதான் கேட்டோம், கேட்கிறோம். தமிழ்க் கவிஞன் ஒருவன், தமிழனைத் தாழ்த்தியும் மாற்றானை உயர்த்தியும் பாடலாமா என்று முன்பு பல முறை கேட்டிருக்கிறோம் இன்றும் கேட்கிறோம்.

ஐயந்திரிபிற்கு இடமின்றி நமது ஐயவினா அமைந்துள்ளது, எங்கே, யார், உருவானவிடை தருகின்றார்கள்? சொல்லம்பில் தோற்றாலும் சூழ்ச்சி அம்பு எய்கின்றார்களே தவிர, இராவணன் நம் பாட்டன் என்று ஏசல் மொழி வீசுகின்றார்களே தவிர, சூர்ப்பனகை நம் பாட்டி என்று சுடு சொல்பாணம் தொடுக்கின்றார்களே தவிர, உண்மையான விடையை எங்கே சொல்கின்றார்கள்? எப்படிச் சொல்வார்கள்? அவர்கள் தான் ஆராய்ச்சிகளே வேண்டாம் அவை தரும் சண்டையும் வேண்டாம், நேராய்க் கம்பனைப் படித்திடுவோம்: நிச்சயம் கவிரசம் குடித்திடுவோம் என்கிறார்களே!" அந்தக் கவிரசத்திலே இன இழிவு என்னும் நஞ்சு கலந்திருக்கிறது; சுயமரியாதை என்னும் இரசாயன முறைப்படி, அந்த நச்சுப் பொருளைப் பிரித்தெடுத்து விட்டு, கலைப் பொருளை மட்டும் தனித்தெடுத்து உண்ணுங்கள் என்கிறோம் நாம். அவர்கள் கேட்க மறுக்கிறார்கள். அதிலே வியப்புமில்லை. மது அருந்துபவன், "வேண்டாமப்பா—அதிலே நச்சுப் பொருள் உள்ளதப்பா" என்று நாம் கூறினால் கேட்கிறானா — முகத்தைத்தானே சுளிக்கிறான்! மதுவிலக்குப் பிரசாரம் அவனுக்கு மதி அற்றோர் பிரசாரமாகத்தானே படுகிறது. கம்பன் கவிதையில் உள்ள இன இழிவைத் துடைப்போம் என்ற நம் கருத்தும் கம்ப ரசிகர்களுக்கு அப்படித்தான் படுகிறது! அதற்கு நாம் என்ன செய்யலாம்? நம் குற்றமா அது?

---

## தர்மம் செய்வது அக்கிரமம்!

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

யாதையோடு வாழ முடியும். பிச்சை கொடுக்கும் வேலையை சர்க்காரே ஏற்றுக்கொண்டு, அதற்குப் பணம் வேண்டுமானால் பணக்காரரிடம் இருந்து பிச்சை வரி என்று ஒரு வரியை கிருஸ்து சொன்ன கணக்குப்படியோ முகம்மது நபி சொன்ன கணக்குப்படியோ சர்க்கார்வசூலித்து அதற்கு ஒரு இலாக்கா வைத்து வினியோகிக்க வேண்டும். அந்தப் பிச்சையை சர்க்கார் தொழிற்சாலைகள் வைத்து அதன் மூலம் பிச்சைக்காரர்களிடம் வேலை வாங்கிக் கொண்டு வினியோகிக்க வேண்டும். இந்தக் காரியத்துக்காக சர்க்கார் எந்த தொழிற்சாலை வைக்கிறார்களோ அந்தமாதிரி தொழிற்சாலையை மற்றவர்கள் வைக்காமல் தடுத்துவிடவேண்டும்.

இப்படிச் செய்தால் பணக்காரர்கள் ஏற்பட்டு நாசமாய்ப் போனாலும் பிச்சைக்காரர்கள் தொல்லையாவது இல்லாமல் போய்விடும். பணக்காரத்தன்மை ஆட்சியில் இல்லாத தேசம் எதிலும் இந்தக்காரியத்தைச் சுலபமாய் நடத்தலாம்.

ஆகவே தர்மம் செய்வது அக்கிரமம் என்று, ஜன சமூகத்துக்கு தொல்லையென்றும், பணக்காரர்களின் அயோக்கியத்தனங்களை மறைக்க ஒரு ஆட்சி என்றும் சொல்லுகிறேன்.

போர்வாள்

27—3—4 சனிக்கிழமை

# மருங்கூர்—அபாய அறிகுறி!

இன்பத் திராவிடமே! எங்கள் திருவிடமே! இனிய தென்னாடே! ஊராள வந்தவரின் கூர்வாள் நின் மார்பிலே பாயவருகிறது! உன் குருதியைச் சுவை பார்க்க எண்ணுகிறது! உன் நாடியை, நரம்பை, அவற்றின் திறத்தை, திண்மையை, ஆய்ந்து பார்த்து அளந்தெடுக்க வருகிறது. நீ தயாராயிரு.

தமிழ்நாட்டுப் பெரியோரே! பெற்ற நற் றாய்மாரே! திராவிட இளஞ் சிங்கங்காள்! அன்புடையீர்! நீங்கள் அனைவரும் அக்கினிப் பரீட்சையில் தேற வேண்டிய கட்டம் மிக விரைவில் வர இருக்கிறது. உங்கள் உள்ளத்திற்கு இந்தச் சேதியைச் சொல்லி வையுங்கள்.

திராவிட இயக்க முரசொலிகாள்! பத்திரிகைகாள்! நீவிரும் எந்த விநாடியிலும் நேரிடக் கூடிய எந்த நெருக்கடிக்கும் தயார் கூறி நில்லுங்கள். திராவிடநாடு திராவிடருக்கே என முழங்குங்கள். ''அஞ்சுவது யாதொன்றும் இல்லை. இனி அஞ்ச வருவதும் இலலை'' என்று பண்பாடுங்கள். பெற்றால் திராவிடநாடு இல்லையேல் இடுகாடு என்பதை எட்டுத் திக்கும் அறிய எடுத்துக் கூறுங்கள்.

எழுத்தாளர்களே! பேச்சாளர்களே! கவிஞர்களே! கலைஞர்களே! நடிகர்களே! இசைவாணர்களே! அலுவலகத்தோரே! உங்கட்கெல்லாம் ஒரு வார்த்தை. எழுத்தோடும் பேச்சோடும் கவியோடும் கலையோடும் நடிப்போடும் இசையோடும் அலுவலகத்தோடும் வாழ்க்கை முடிந்து விடுவதில்லை. இவ்வளவையும் உள்ளடக்கிக் கொண்டு, இவ்வளவையும் தாண்டிக்கொண்டு, விரிந்து பரந்து நாற்றிசை எங்கணும் மேவிடும் பண்புடையது வாழ்க்கை எனும் வானவெளி. அந்த வானவெளியிலே பயங்கரமான இடி இடிக்க இருக்கிறது. கண்களைப் பறிக்கும் மின்னல் வீச இருக்கிறது. அந்த நெருக்கடியான கட்டத்தில் உங்கள் கடமையை நிறைவேற்ற முந்தி நில்லுங்கள் முனைந்து நில்லுங்கள்.

அதோ, மருங்கூர், அபாய அறிகுறி காட்டிவிட்டது. இனி எத்தகைய நெருக்கடியும் எற்படக்கூடும் என்பதை, குறிப்பாக உணர்த்தி விட்டது.

**தலைவர் பெரியார்** பேச இருந்த கூட்டத்திற்கு 1—4 என்றால் அது சின்னஞ்சிறு **சேதி** அல்ல. திராவிடர்தம் உள்ளத்தெல்லாம் குமுறலையும் கொந்தள[ிப்]பையும் உண்டாக்கும் முக்[கிய]மானதோர **நிகழ்ச்சி**.

சர்க்கார், எத்தகைய அடக்[கு]முறை பீரங்கியையும் நம்[பி]யிருப்ப, மனந்துணிந்து [நட]வடிக்கையில் இறங்கிவிட்ட[ார்]கள் என்பதைத்தான் அது எடு[த்]துக் காட்டுகிறது.

மருங்கூரில், சர்க்கார் நமக்[கு] அபாய அறிகுறி காட்டியிருக்[கி]றது; நம் தலைவர் பெரிய[ார்] சர்க்காருக்கு அபாய அறிகு[றி] காட்டி இருக்கிறார். "இ[வ்] விதித்துள்ள தடை உத்தர[வு] இதோடு விட்டுவிடப் போவதில்லை சரியான அமைப்புடன் தகு[ந்த] நேரத்தில்இதை முறைப்படிஎதிர்க்[கத்]தான் கருதி இருக்கிறேன்". என் பெரியார் அன்று சொன்னா[ர்]. அது வெறும் வார்த்தை[த்] தொகுப்பல்ல. அவருடை[ய] உள்ளம். ஆம்! ஈ. வெ. ரா. உ[ள்]ளம்! அது நீறு பூத்த நெருப்[பு] அதை நீறு என எண்ணி ஏமா[று]கிறது சர்க்கார். அது நெருப்[பு] எனபதை அறியும் காலம் நெ[ரு]ங்கி வருகிறது என்பதை[த்]தான் மருங்கூர் சம்பவம் விளக்[கி] விட்டது.

நாம் மறுபடியும் மறுபடி[யும்] கூறுகிறோம், மருங்கூர் அபாய அறிகுறி.

அதன் முழுப் பொரு[ளை] உணருங்கள் என்று வேண்[டுகி]றோம்—முதலில் உங்க[ளை] பிறகு, சர்க்காரை!

கடைசியாக, இரகசியத்தி[ல்] சர்க்காருக்கு, ஒரு வார்த்தை: "திராவிடர் உள்ளம் ஒரு கு[மு]றும் எரிமலை. அதன் உச்சியி[ல்] வெடிமருந்து சோதனை செ[ய்]வது மிக மிக ஆபத்தான[து]. வேண்டாம்! வேண்டாம் இ[ந்த] ஆபத்தான விளையாட்டு!"

—




## ஐயையோ
## [?]வள் சாகவில்லை!"

[?]செத்த பிணம் வாசலிற் கிடக் [?]றது. செத்த பிணத்தைச் சுற்றி [?]விச் சாக இருக்கும் பிணங்கள் [?]த்தி அழுகின்றன. அனைவர் [?]ண்களும் குளமெனக் காட்சி [?]ருகின்றன. ஒவ்வொருவர் முகத் [?]லும் சோகம் ததும்புகிறது. இந் [?]லையில் செத்தவளின் காதலன்— [?]ருண்டு படுத்திருப்பவன்—திடீர் [?]ரென எழுந்து உட்கார்ந்து [?]காண்டு "ஐயையோ அவள் சாக [?]ல்லை! ஐயையோ அவள் சாக [?]ல்லை!" என்று கூச்சலிடத் [?]தாடங்கினால் எப்படி இருக்கும்? [?]ச்சலிடுவதோடு நில்லாது, அவள் கண்ணுக்கு மை தீட்டுங் [?]. நெற்றிக்குத் திலகமிடுங்கள். [?]ட்டுப்புடவை வாங்கிக் கொடுங் [?]. மயில் நிற ஜாக்கட் தைத்துக் [?]காடுங்கள். தொங்கட்டான் புதி [?]க வாங்கி அணியுங்கள். எட்டு [?]ரனில் செயினும், ஐந்து சவர [?]ல் தங்கவளையலும், பத்து சவர [?]ல் ஒட்டியாணமும் வாங்கிப் [?]காடுங்கள்! அவள் சாகவில்லை. [?]வள் சாகவில்லை!" என்று பிர [?]சங்கம் வேறு செய்யத் தொடங்கி [?]ல் எப்படி இருக்கும்? "சீக்கிரம் [?]வளை எழுப்புங்கள்—கடற்கரைக் [?] போக வேண்டும். திரும்பி [?]ரும்போது சினிமா வேறு பார்க்க [?]வேண்டும்" என்றெல்லாம் அவன் [?]பசர மொழிகளையும் கூடவே [?]ளித் தெளித்தால் எப்படி [?]இருக்கும்?

[?]அப்படித்தான் இருக்கிறது, [?]சமஸ்கிருதம் சாகவில்லை! சமஸ் [?]கிருதம் சாகவில்லை! அதைக் கட் [?]டாய பாடமாக்குங்கள்—கட்டாய [?]பாடமாக்குங்கள்!" என்று சில பிராமணோத்தமர்கள் பிரசாரம் செய்வதும்!

சமஸ்கிருதம் சாகவில்லையாம்! அது இன்னமும் உயிரோடுதான் இருக்கிறதாம்! அது அற்புதமான தெய்வீக மொழியாம்! அதில் இருக்கிற இலக்கிய சிருஷ்டிகளும் காவிய வர்ணனைகளும் நாடக நூற்களும் தத்துவ விசாரணைகளும் வேறு எந்த மொழியிலுமே கிடையாதாம்! ஆகவே அதைக் கட்டாய பாடம் ஆக்க வேண்டுமாம்! தமிழர்கள் அனைவரும் அதைப்படித்தே தீரவேண்டுமாம்! வாரத்திற்கு 5 மணி நேரம் பள்ளிக்கூடங்களில் சம்ஸ்கிருத கட்டாயபாடம் போதிப்பதற்காக என்று ஒதுக்கியே ஆக வேண்டுமாம்! ஸ்ரீமன் என். எஸ். வரதாச்சாரியார் அக்கிராசனம் வகிக்க, கே. வி. எல். சாஸ்திரிய வாள் உபய குசலம் விசாரிக்க கே. எஸ். இராமசாமி சாஸ்திரியார் உபந்யசிக்க, ஸ்ரீலஸ்ரீ ராம தேசிகாச்சாரியார் வந்தனோபசாரம்வழங்க மந்திரி பாஷ்யம் அய்யங்கார் வாசாமகோசாமாய் ப்ரசங்க மாரி புரிய, சென்னையில், சென்ற கிழமை கூடிய தக்ஷிண பாரத தேசிய சமஸ்கிருத பண்டித பரிஷத் மஹாகூட்டத்தின் தீர்மானம் இது!

இந்தத் தீர்மானத்தை பித்தத்தின் முதிர்ச்சி என்பதா அல்லது பேதமையின் அறிகுறி என்பதா அல்லது மந்தமதியின் உண்மைத் தன்மை என்பதா, என்னவென்று சொல்லி அழைப்பது என்றே நமக்குத் தெரியவில்லை!

அப்படியெல்லாம் ஒன்றும் சொல்லி அழைக்க வேண்டாம் சார்! அவர்களே தங்கள் தீர்மானத்தின் தன்மையைத் தெரிந்துகொண்டுதான் கீழ்ப்பாக்கத்திற்கு வெகு அருகில் தங்கள் மாநாட்டை நடத்தியிருக்கிறார்கள் என்கிறான் நம் ஆபீஸ் பையன். பையன் புத்திசாலி, பொடியனாய் இருந்தாலும்!

புத்திசாலியா, அல்லவா, நீங்களே சொல்லுங்கள்!

## ஆரஞ்சுப்பழம், சட்டசபையில்!

சட்ட சபையில் தூங்கலாமா?

சட்ட சபையில் தூங்கலாம் என்றால் சும்மாவா? குறட்டை விட்டுக் கொண்டா?

சட்ட.சபையில் சிகரெட் பிடிக்கலாமா?

சட்டசபையில் பொடி போடலாமா?

சட்டசபையில் நாவல் படிக்கலாமா?

சட்டசபையில் கிரிக்கெட் புத்தகத்தை, டாக்டர் சுப்பராயன் அவர்கள், கையில் வைத்துக் கொண்டு, புரட்டிக் கொண்டிருக்கலாமா?

சட்டசபையில் செய்தித்தாள் படிப்பது முறையா?

சட்டசபையில் "ஆபீஸ் பைல்"களைப் பைசல் செய்யலாமா?

சட்டசபையில் உரக்கச் சிரிக்கலாமா?

பார்வையாளர்கள் காலரியில் சட்டசபை உறுப்பினர்கள் உட்காரலாமா?

உறுப்பினர்களின் நாற்காலிகளில் பார்வையாளர்கள் உட்காரலாமா?

சட்டசபையில் வெட்கம் வெட்கம் என்று கூறலாமா அல்லது "அய்யய்யோ அய்யய்யோ" என்று கூவலாமா?

சட்டசபையில் பேசலாமா? முணுமுணுக்கலாமா? தும்மலாமா?

பிரதம மந்திரி சட்டசபைக்கு வராமலே இருந்தால் கல்லதா?

வந்து கொண்டே இருந்தால் நல்லதா?

மந்திரிகள் நாற்காலிகளில் இல்லாமலே இருந்தால், எம். எல். ஏக்கள் சட்டசபையில் பேசாமலே இருக்கலாமா?

சட்டசபையில் பலகாரம் சாப்பிடலாமா? முறுக்கு சாப்பிடலாமா? வெறும் பிட்டாய்.....

—சென்னை சட்டசபை சென்ற மூன்று மாத காலங்களில் மிக அவசரமாக விவாதித்து முடிவு கட்டியுள்ள மிகச்சிக்கலான பிரச்சினைகள் இவை!

"கடைசி கடைசியாக," இந்த வாரம், ஒரு எம். எல். ஏ. சட்டசபையில் ஆரஞ்சுப் பழம் சாப்பிடலாமா என்று கேட்டார் சபைத் தலைவரை! ஐயோ பாவம் அவருக்கு எவ்வளவு ஆசையோ ஆரஞ்சுப் பழம் சாப்பிட! அந்த ஆசையில் மண் அள்ளிப் போட்டுவிட்டார் சபைத் தலைவர்! "ஊஹூம் கூடவே கூடாது. இதோ பாரும் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் கூட ஆரஞ்சுப் பழம் சாப்பிடக்கூடாது என்று "ரூலிங்" (Ruling) இருக்கிறது" என்று ஆதார புத்தகத்தை வேறு புரட்டத் தொடங்கிவிட்டார்.

"அட! என்ன மனுஷரய்யா இவர்! என்னமோ ஒரு ஆள் ஆரஞ்சுப் பழம் சாப்பிட வேண்டுமென்று சொன்னால், "சரி, தெரியாமல், மறைவா, சாப்பிட்டுப் போயேன்" என்று சொன்னால் என்ன குடிமுழுகியா போய்விடும்? என்ன இருந்தாலும் இவ்வளவு கல்நெஞ்சு கூடாதப்பா கூடாது" என்கிறான் "போர்வாள்" அலுவலகத் தோழர்களுக்கு ஆரஞ்சுப்பழம் விற்பனை செய்யும் அகிலாண்டம்!

அவனுக்கென்ன தெரியும் சட்டசபை விவகாரம்! நன்முறையில் நாடாள்வது என்ற ஒன்றைத் தவிர மற்ற எல்லாப் பிரச்சினைகளும் அலசி அலசி ஆராய்ந்து முடிவு செய்யப்படும் இடம் அல்லவா சென்னை சட்டசபை!

## என்று தணியும் இந்த அடக்குமுறை தாகம்?

சென்னை சர்க்காரின் அடக்குமுறை தாகம் துளியும் தணியவில்லை, அடக்குமுறை ஷர்பத்தை அவர்கள் பலமுறை அருந்தியும் கூட!

பக்கிங்காம் மில் தொழிலாளர்கள்மீது கண்ணீர்ப் புகை வீசினார்கள்! தாகம் தணியவில்லை.

என். ஜி. ஓ.-க்களிற் சிலரைச் சிறைபிடித்தும், சிலரை டிஸ்மிஸ் செய்தும், சிலருக்கு 144 வீசியும் சிலருக்கு "சம்பளக் குறைவு" தண்டனை கொடுத்தும் பார்த்தார்கள். தாகம் தணியவில்லை.

கம்யூனிஸ்டுகளை சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் நிறுத்திப் பார்த்தார்கள்—தாகம் தணியவில்லை.

சோஷலிஸ்டுகளின் தொண்டர் படையைச் சட்ட விரோதமாக்கிப் பார்த்தார்கள்-தாகம் தணியவில்லை.

கருஞ்சட்டைப் படை என்பதாக ஒன்றைக் கற்பனை செய்துபார்த்து, அந்த மனக் கற்பனையைத் தடை செய்தும் பார்த்தார்கள்—தாகம் தணியவில்லை.

தொழிற் சங்கங்களின் உரிமைகளைப் பறித்தும், பண இருப்பை அழித்தும், தலைவர்களைப் பழித்தும், சிறையை அவர்கட்குப் பரிசாக அளித்தும் பார்த்தார்கள்—தாகம் தணியவில்லை.

திராவிடர் தலைவர் பெரியார் அவர்கள்மேல் 144 என்ற அக்கினிக் குண்டை ஏவியும் பார்த்தார்கள்—தாகம் தணியவில்லை.

இப்போது, தங்கள் கட்சித் தோழர், மாகாண காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர், நீண்ட நாள் தேசியவாதி, மேலே சொன்ன ராஜத்வேஷ வகுப்புவாத நாஸ்திக மத எதிர்ப்புக் கட்சிகள் எதிலும் சேராத உயர் திருவாளர், கோவை நாராயணசாமி நாயுடுகார்மீதும் காராக்கிருகவாசம் என்ற அடக்குமுறை ஈட்டியைப் பாய்ச்சி இருக்கின்றனர்.

இப்போதுகூட சர்க்காரின் தாகம் தணிந்ததாகத் தெரியவில்லை. இன்னமும், அடக்குமுறை ஷர்பத் பருகவேண்டும், மேலும் மேலும் பருகவேண்டும், நாளும் நாளும் பருகவேண்டும் என்றுதான் துடிக்கின்றனர்.

"என்று தணியும் இந்த அடக்
முறை தாகம்? என்று பிறக்கும் நல்
உரிமையில்மோகம்" என்று யாரே
ஒரு பிச்சைக்காரன் வீதிவழியே
ஏதோ ஒரு பழம்பாட்டைப் பாடி
கொண்டுபோகிறான். அடபாவமே
பாதுகாப்புச் சட்டம் அவனையு
விழுங்கிவிடப் போகிறது! அவ
தங்களைத்தான் குற்றம் சாட்டி
பாடுகிறான் என்று சர்க்கார் நினை
துக் கொள்ளப் போகிறார்கள்
அதுபோல பாடாதே என்று யார
னும் அவனுக்குச் சொல்ல
கூடாதா? தயவு செய்து சொ
லுங்கள் சார், தயவு செய்து சொ
லுங்கள்!

## இருட்டறையில் உள்ளதடா காங்கிரஸ்!

பல ஆண்டுகளுக்கு முன் ந
கூறிய இவ்வாசகம்—பலர் எள்
நகையாட நகையாட, அவர்க
நகையாடிவிட்டுப் போய் கூறிய வ
கம்—ஊரார் அனைவரும் எதிர்
உறுமியபோதும் அஞ்சாது ந
கூறிய வாசகம், இன்று ஜெய
பிரகாஷ்களால் சொல்லப் ப
விட்டது. ஆம்! இருட்ட
யில் உள்ளதடா காங்கிரஸ் என
ஜெயப்பிரகாஷ்' நாராயணனு
அவருடைய கட்சித்தோழர்களு
கட்சியும், மார்ச் 20-ம் தேதியன்
தீர்மான வடிவமாகக் கூறிவி
னர். காங்கிரசிலிருந்து சோ
லிஸ்டு தோழர்கள் அனைவரும்
ரல் 15-க்குள் வெளியேறி
வேண்டும் என்று கட்சி மா
கட்சித் தோழர்களுக்கு தாக்கீ
பிறப்பித்துவிட்டது. வெளியேற
படலமும் தொடங்கிவிட்டது.

"காங்கிரஸ் ஒரு பூர்ஷ்வா ஸ்
பனம்," "காங்கிரஸ் இனி ப
டாளிகளின் மேடையாக இரு
முடியாது," "காங்கிரஸ் அதி
வாதிகளின் ஸ்தாபனமாகி வி
டது" "காங்கிரசை எதிர்ப்ப
குச் சரியானதோர் கட்சி இல்
யேல் இனி நாடு நலிவுறும்," "கா
கிரசை முதலாளித்துவப் பாதைய
ருந்து திருப்புவதென்பது இனி மு
யாத காரியம்"

—இவை மூன்று ஆண்டுகளு
முன் வரை பெரியார் இராமச

(5-ம் பக்கம் பார்க்க.)

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டையைக் கனைத்துக் கொண்டு, சுற்றும் முற்றும் பார்த்த, சுருதியை உயர்த்தி, பீட்டதிலிருந்து கதையை விரு விருப்பாகச் சொல்லிக்கொண்டே போனர்.

கண்ணன் (மெதுவாக):—

சிவா! கதையைச் சொல்லிக் கொண்டே அவர் வாயிருக்க, அவர் கண்கள் நம்மையே பார்த்துப் பார்த்து மிரளுகின்றனவே, அதைப்பார்!

சிவன் (மெதுவாக):—

கள்வப் பொருள் வியாபாரிக்குக் கண்ணில் ஒளியிருக்குமா? கருத்தில் உரமிருக்குமா?

தம்பிரான்:—

பாதர்கள் வலையில்
மாட்டி வைக்காதே,
மண்பொரு ளாசையைக்
காட்டிக் கொடாதே,
பாதகர் நேசத்திற்
கூட்டிவைக்காதே,
பாவி யென்னைக்
கைவிட்டு விடாதே!

கண்ணன் (மெதுவாக) பார்த்தாயா சிவா, பண்டாரத்தின் பாட்டை! "மண்பொருளாசையைக் காட்டிக் கொடாதே"யாம். பார், கையிலே பச்சைக்கல் மோதிரம், கழுத்திலே பொன் கட்டிய உருத்திராக்ஷம்! "பாவி யென்னைக் கைவிட்டு விடாதே" என்கிறாரே ஏன் தெரியுமா?

சிவன்:—கேள்வித்தாள் கொடுத்திருக்கிறோமே அதற்கு.

தம்பிரான்:—

இருவர்மண் சேர்த்திட
ஒருவர் பண்ண
ஈரைந்து மாதமாய்
வைத்த சூளை
அருமையா யிருப்பினும்
மந்தச் சூளை
அரைக் காசுக்
காகா தென்றுடாய்
பாம்பே!

இப்படியாக, பாம்பாட்டிச்சித்தர் கூட, இப்பொழுது கவர்ச்சியோடும், அழகோடும் காணப்படும் இந்த ஊத்தைச் சடலம் அழியும் தன்மையது என்று கூறுகிறார்; அழியப்போகும் இந்த உடலுக்கு இன்பந்தர, மண்ணாகப்போகும் மற்றொரு உடலை நாடித் திரிவதேனோ? அழுகணிசித்தர் கூறுகிறார்.. ...

கண்ணன் (மெதுவாக);—சிவா, இதுதான் 'சத்' பொருளோ? பதில் சொல்லச் சொல்லப்பா, நாம் போவோம்!

சிவன் (மெதுவாக):—கண்ணு, பொறு. தெரிந்ததையெலலாம் சொல்லட்டுமே கேட்போம்!

தம்பிரான்:—

........மற்றின்பம் யாவினும் சிற்றின்பமே சிறந்தது என்று கருதி மதியை இழந்து மங்கையருக்காக அலைந்து, அழிந்தவர் பலர்.

ஒரு சமயம் தேவேந்திரன் கொலுமண்டபத்திற்குக் கங்கை வேகமாக வந்தாள். அவள் வந்த அவசரத்தில் காற்று பலமாக வீச, ஆடை விலகி, மங்கையின் உள் அங்கமனைத்தும் வெளி தெரிய, (தம்பிரானின் முகத்தில் புன்னகை தவழ்கிறது!) அதனைக் கண்ட சபையிலிருந்த அனைவரும் "சிவ! சிவ!" என்று தங்கள் கண்களை இரு கைகளாலும் மூடிக்கொண்டு, அவளுடைய மானத்தைக் காத்தார்கள்! சைவ மெய்யன்பர்களே, அங்குமொரு பெண்ணைப் பிடித்த கயவனிருந்தான்! துன்முகன் என்ற அந்தக் கீழ் மகன் மட்டும், ஆடை விலகிய கங்கையின் மேனியை, அகல விரித்த கண்களோடு, கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்!

காமுகன் செய்வதைக் கண்ட தேவேந்திரனுக்குச் சினம் பிறிட்டுக் கொண்டு வந்தது.

"பாபி! புனிதமான இந்தச் சபையில், கேவலமான பெண்ணைப் பிடித்த பித்தனே, மோகத்தில் மூழ்கிய கசடனே, பிடி சாபம்...."

"தேவேந்திரா! அடியேனை மன்னிக்க வேண்டும்!"

"முடியவே முடியாது! பூமியில் யயாதி மகனாகப் பிறந்து, கங்கையை அடைந்து, கூடி வாழ்ந்து, உன் இச்சை தணிந்ததும் இங்குவா! போ! போ!" என்று சாபத்தை.......

கண்ணன் (உரக்க):—

பிரசங்கியாரே! தேவேந்திரனுக்குப் பெண்ணாசையே கிடையாதோ?

கூட்டத்தில் ஒருவர்:....ஆயிரம் கண் அவருக்கு வந்த கதையை மறந்து விட்டீரா?

சிவன்:—தம்பிரான் அவர்களே! எலலோரும் கண்மூடிக் கொண்டிருந்தார்கள் அல்லவா, துன்முகனைத் தவிர?

தம்பிரான் (நடுங்கும் குரலில்):—ஆமாம்!

சிவன்:—துன்முகன் கண் திறந்து கொண்டிருந்தது, கண் மூடிக் கொண்டிருந்த இந்திரனுக்கு எப்படித் தெரிந்தது?

தம்பிரான் (தைரியம் வந்தவரைப்போல):—ஞானக் கண்ணால் பார்த்தார்!

கண்ணன்:—ஞானக் கண்ணிருக்க, ஊனக்கண்ணை மூடி என்ன பயன்? துன்முகனுக்கு ஞானக் கண்ணிருப்பது ஞாபகத்திற்கு வாராததினால், ஊனக் கண்ணாலேயே பார்த்துக் கொண்டிருந்தான். மற்

றவர்கள் ஞானக் கண்ணால் துன்முகன் செய்ததையே செய்து கொண்டிருந்தார்கள், இதி லென்ன வித்தியாசமிருக்கிறது? துன்முகனுக்குச் சாபம் தருவது சரி, ஒரு பாபமும்—விலகிய ஆடையோடு வந்ததைத் தவிர—செய்யாத கங்கைக்குச் சாபம் தருவது சரியா?

கண்ணன் :....'' ஆசைப்பட்ட வளை அடைந்து, கூடி வாழ்ந்து, உன் இச்சை தணிந்ததும் வா'' என்பது ஒரு சாபமா அல்லது......?

தம்பிரான் பதில் கூற முடியாமல் தத்தளித்தார். அவர் கண்கள் உருண்டன! முகம் வாடியது!

ஒரு குரல்:—போதும் போதும், உங்கள் பிரசங்கம்! கேள்வித் தாளுக்குப் பதில்!

தர்ம கர்த்தா:—முடியாது, பதில் இதில் கூற! தாண்டவராயத் தம்பிரானே நடத்துங்கள் கதையை; இதுகள் வேறே இப்போ தொந்திரவு சுவாரசியமான கட்டத்தில் வந்து கெடுக்குராளுங்கோ!

ஒரு குரல் :—முடியாது! முதலில் பதில் சொல்லித்தானாக வேண்டும்.

இப்படியாக கூட்டத்தில் குழப்பம் அதிகரித்தது. திகைத்துக்கொண்டிருந்த ''பாவியைப் பரமன் கைவிட்டுவிடவில்லை.'' நல்ல சமயமிதுவே என்று நழுவி விட்டார் தம்பிரான்! தம்பிரான் ஓடிவிட்டார் பதில் கூற முடியாமல் என்பதை அறிந்ததும், அனைவரும் கலைந்தனர்.

காதலனின் வருகைக்காக வாட்டத்துடன் காத்துக் கொண்டிருந்த மனோரமா, இவனைக் கண்டதும் ஓடி அவன் உடலுக்குக் கொடியானாள்!

''வெற்றியா?''

''போருக்கா சென்றேன்?''

''இல்லை! நடந்ததைச் சொல்லுங்கள்!''

''தம்பிரான் நழுவி விட்டார்!''

''எப்படி?''

''பின் புறமாக!''

''அப்பா! இதற்கா இவ்வளவு சிரமம்?''

''தம்பிரான் ஊரைவிட்டோடி விட்டதாகக் கருதாதே! ஆரியப் பிரசாரமே அலரியடித்துக் கொண்டோடியது என்பதுதான் இதன் பொருள்! வெற்றியா தோல்வியா இப்பொழுது கூறு!''

''நிச்சயம் வெற்றிதான் கண்ணாளா!''

''வெற்றிபெற்ற எனக்கு பரிசு இல்லையா கண்ணே?''

''காதல் உலகத்தில், பரிசுக் பஞ்சம்! கன்னத்தை இப்ப.......''

வசந்தம் வரும்பொழு சோலையிலுள்ள செடிகளிலு மரங்களிலும் பூக்கள் மலர்ந் நறுமணத்தை அள்ளி வீசு ஆனால் வந்த வசந்தம் நகர் போகாமலே இருந்துவிடுமா பூத்த மலர்களும், பச்சை இ களும் உதிராமல் என்று நிலைத்திருக்குமா? இயற்கையி அழகும், அழிவும் மாறி மா வரும். அதுபோலவே மக் ளின் உள்ளத்திலும் இன் மும் துன்பமும் மாறி மா வரும். இந்த இயற்கையி உண்மையைக் காதல் அணை பில் தம்மை மறந்திருந்த சி னும் மனோரமாவும் எப்படி பாபம் அறிவார்கள்?

(தொடரும்)


## 18-வது திராவிடர் கழக மாகாண மாநாடு

### தூத்துக்குடியில்

### 1, 2—5—48 சனி, ஞாயிறுகளில் நடைபெறும்

திராவிடநாட்டுத் தலைவர்கள் பத்திரிகை ஆசிரியர்கள் அனைவரும் வருகிறார்கள்.

25,000 ரூபா செலவில், எல்லாவகையிலும் சிறப்பான ஏற்பாடுகளுடன், மாநாடு நடைபெறுகிறது. திராவிட இளைஞர்களே! மாநாட்டின் வெற்றி உங்கள் வெற்றி; உங்கள் இனத்தின் வெற்றி; உங்கள் திராவிடத் திருநாட்டின் வெற்றி மாநாடு வெற்றிபெற இயன்றவகை யெல்லாம் துணை செய்யுங்கள். வெல்க திராவிடம் என முழங்குங்கள்!

K. V. K. சாமி,
செயலாளர்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

றும், கடவுளே ஒருவனை ஏழை
க ஆக்கிறார் என்றும் வைத்துக்
ல்வதானாலும் தர்மம்—பிச்சை
டுக்கிற அதிகாரத்தை மாத்தி
ஏன் பணக்காரனுக்கு
டுத்து அவனுக்கு இஷ்டமிருந்
பிறத்தியானுக்கு பிச்சை
ட்டு மோட்சத்துக்குப் போகும்
யும் அவனுக்கு இஷ்டமில்லை
ல் பிச்சை கொடுக்காமல் இரு
நரகத்துக்குப் போகும்படியும்
ற்காகக்கற்பிக்கவேண்டும் என்
நமக்குப் புலப்படவில்லை.
றியும் ஏதோ இரண்டொரு
க்காரர்கள் பிச்சை கொடுத்து
ம் செய்து மோட்சத்துக்குப்
வதற்காகவும் பலர் பிச்சை
டுக்காமல் இருந்து நரகத்திற்
போவதற்காகவும்எத்தனையோ
டிக்கணக்கான பிச்சைக்காரர்
ஏன் சிருஷ்டித்தார் என்ப
நமக்கு விளங்கவில்லை. செல்
கடவுளால் உண்டாக்கப்பட்ட
ல் ஏழையும் பணக்காரனும்
ளால் தானே உண்டாயிருகக
ண்டும்? இந்தப்படி ஒரு கடவுள்
றையும் படைத்து ஏழைக்கு,
சை வாங்கும் உத்தியோகமும்,
க்காரனுக்குப் பிச்சை கொடுக்
உத்தியோகமும் கொடுத்து
க்கு கணக்கு எழுதிவைத்து
னவனுக்குத் தகுந்த மோட்ச
த்துக்கு அனுப்பும் வேலையில்
ட்டிருக்கிறார் என்றால் கடவுள்
ர்கள் கடவுளை பரம முட்டா
வும் பரிசுத்த மடையனாகவும்
ஷ்டிக்கிறார்களா அல்லது கட
பரம கருணாநிதியாகவும் பார
மற்ற தந்தையாகவும் சிருஷ்
றார்களா என்று கேட்கின்
ர்.

ழையை சிருஷ்டிப்பானேன்
க்காரனை சிருஷ்டிப்பானேன்?
ழை பணக்காரனிடம் போய்
ஞ்சும்படி செய்வானேன்?
க்காரன் தனக்கு இஷ்டமிருந்
கொடுப்பதும் இஷ்டமில்லா
ால் கொடுக்காமல் ஆளைவிட்டு
த்தைப் பிடித்து தள்ளச்
ல்லுவதும் ஏன்? என்பவை
யோசித்துப் பார்த்தால் முத
இந்த தத்துவர் உண்மையாய்
குமா என்பதே பெரிய சந்
ாய் இருப்பதோடு பரிசுத்த
கத்தன்மையுடன் கடவுளை

சிருஷ்டித்துப் பிரசாரம்செய்கின்ற மக்கள் எவ்வளவு முட்டாள்களாய் இருக்கிறார்கள் என்பதும் வெள்ளிடை மலையாகும்.

கடவுள் பார்த்து, ஒரு உத்திரவில், அல்லது ஒரு சங்கல்பத்தில் எல்லாப் பொருளும் எல்லா மக்களுக்கும் பொதுவாய் இருக்கத்தக்கது என்று செய்து விட முடியாதா என்று கேட்பதோடு, எல்லா ஜீவன்களையும் தானே சிருஷ்டித்து தானே நடத்துகிறவனாய் இருக்கிறபடியால் ஒன்றை ஒன்று துன்புறுத்தவோ ஒன்றை ஒன்று கொன்று தின்னவோ கூடாது என்று நிர்ணயித்துவிடமுடியாதா என்றும் கேட்கின்றேன். உண்மையாகவே ஒரு யோக்கியமான கடவுள் இருந்தால் இதைச் செய்திருக்க மாட்டாரா என்றும் கேட்கின்றேன்.

இந்தப்படி செய்வது முடியாத காரியம் என்று யாராவது சொல்லுவார்களானால் ரஷ்யாவில் லெனின் என்ற ஒரு மனிதன் இந்தப்படி உத்திரவு போட்டு பணக்காரரும், பிச்சைக்காரரும் இல்லாமல் செய்து விட்டாரே, இவர் கடவுளுக்கும் பெரியவரா? என்று கேட்கிறேன்.

ஆதலால் தர்மம்—பிறத்தியானுக்குப் பிச்சை கொடுப்பது, மற்றவர்களுக்கு உதவுவது என்கின்ற முறைகள் எல்லாம் பணக்காரத் தன்மைக்கு அனுகூலமானதே தவிர, பணக்காரத் தன்மையைக் காப்பாற்ற ஏற்படுத்தப்பட்டதே தவிர அவை ஒரு நாளும் ஏழைகளுக்கும், பிச்சைக்காரர்களுக்கும் அனுகூலமானதல்ல.

ஏனெனில் பிச்சை கொடுப்பது, மற்றவர்களுக்கு உதவி செய்வது என்கின்ற காரியங்களால் தான் இல்லாத ஏழை மக்களை—தரித்திரவாசிகளான மக்களைப் பிரித்தாள முடியும். ஏழை மக்கள் பிரிந்திருந்தால் தான் பணக்காரர்கள் வாழமுடியும்.

அன்றியும் பணக்கார மக்கள் மீது ஏழை மக்களுக்கு குரோதமும், வெறுப்பும் இல்லாமல் இருக்க வேண்டும் என்கின்ற காரியத்திற்காகவே தர்மம் என்பதும், பிச்சை என்பதும் கற்பிக்கப்பட்டதே ஒழிய பிச்சைக்காரர்களுக்கு உதவி செய்வதற்கோ அவர்களைக் காப்பாற்றுவதற்கோ ஏற்பட்டதல்ல.

பிச்சைக்காரர் இருப்பதும், அவர்கள் பிச்சை எடுப்பதும் ஜன சமூகத்துக்கு ஒரு பெரும் தொல்லையும் இழிவுமாகும் என்பதோடு ஒரு கடவுள் இருந்தால் அக் கடவுளுக்கு மிகுந்த அவமானமும் அயோக்கியத்தனமான காரியமுமாகும்.

இந்தக் கருத்தை வைத்தே திருவள்ளுவரும் "பிச்சை எடுத்து வாழவேண்டிய மனிதனை கடவுள் சிருஷ்டித்து இருப்பானேயானால் அக்கடவுள் இல்லை யென்றுதான் அருத்தம், அவன் இருந்தாலும் ஒழிய வேண்டியதே அவசியம்" என்று சொல்லியிருக்கிறார்.


திருவள்ளுவர் நூலில் முன்னுக்குப்பின் முரண்கள் பல இருந்தாலும், அவர் ஒரு தனிஉடமைக்காரரேயானாலும் இந்த ஒரு விஷயத்தில் தைரியமாய்ச் சொல்லியிருக்கிறார்.

ஆனாலும் இதற்கு முரணாக மற்றொரு இடத்திலும் சொல்லி இருக்கிறார். அதாவது "தர்மம் செய்தவனையும் பாவியையும் பார்" என்று சொல்லியிருக்கிறார். தர்மம் செய்ததினாலேயே ஒருவன் பல்லக்கில் போகும்படியான செல்வனாகப் பிறந்தான் என்றும், தர்மம் செய்யாததினாலேயே மற்றொருவன் பல்லக்குத்தூக்கும் தரித்திரனாகப் பிறந்தானென்றும் சொல்லுகிறார்.

அப்படியானால் ஏழை பணக்காரத்தன்மையை திருவள்ளுவர் ஆதரிக்கிறார் என்பதாக ஒரு புறத்தில் விளங்குகிறது. இந்த முரணும் மயக்கமும் ஏற்பட்டதற்குக் காரணம் இவருக்கு கடவுள் தன்மையில் ஆத்மார்த்தத்தில் இருந்த நம்பிக்கையேயாகும். கடவுள் தன்மை அதாவது "மனிதத்தன்மைக்கு மீறின ஒரு சக்தி இருக்கிறது. அதற்கும் உலக நடவடிக்கைகளுக்கும் சம்பந்தம் உண்டு" என்று எவன் கருதினாலும் அப்படிப்பட்டவன் முன்னுக்குப்பின் முரணாகவும், தனிஉடமைக்காரனாகவும், உயர்வு தாழ்வை ஆதரிக்கிறவனாகவும் இருந்துதான் தீருவான்.

எது எப்படி இருந்த போதிலும் உலகத்தில் மனித சமூகம் தொல்லை இல்லாமல் வாழ வேண்டுமானால் பிச்சை கொடுப்பதும் பிச்சை எடுப்பதும் சட்டவிரோதமான காரியங்களாகக் கருதப்படவேண்டும். அப்படியானால்தான் மனிதன் சுயமரி

(5-ம் பக்கம் பார்க்க)




தொடர் கதை

[முன்பு: சிவன் தன் காதலி மனோரமாவுடன் பேசிக் கொண்டிருக்கிறான், வீட்டில். சிவனை, அவன் தோழன் கண்ணன் வந்து அழைக்கிறான். போய்வரட்டுமா என்கிறான் சிவன். சரி என்கிறாள் மனோரமா. பிறகு...]

நான்காம் பகுதி

## நழுவி விட்டார்!

"சிவா, அனுமதியும் கிடைத்துவிட்டது புறப்படு." என்று சிரித்துக்கொண்டே கூறினான் கண்ணன். சிவனும் அவன் தோழர்களும் விரைவாக நடக்கத் தொடங்கினார்கள்.

காதலன் செல்வதை, கண்ணிமைக்காது பார்த்துக்கொண்டு நின்ற மனோரமா, அவன் உருவம் மறைந்ததும், வீட்டினுள் சென்றாள்.

"கண்ணா, கேள்வித் தாள்கள் எங்கே?"

"இந்நேரம் கூட்டத்தில் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். தாண்டவராயத் தம்பிரானும் புறப்பட்டு விட்டாராம். சிவா, விரைந்து நட!"

வேகமாக நடந்து சென்றார்கள். முருகன் கோயிலில் நடந்த புராணப் பிரசங்கத்திற்குச் சென்றார்கள். கதையைக் கேட்டுக் களிக்க அல்ல! ஆராய்ச்சிக் கேள்விகளைக் கேட்டு, அதன் மூலம் அங்குக் கூடியிருக்கும் பகுத்தறிவற்ற மக்களுக்குத் தெளிவு பிறக்கச் செய்யவேண்டுமென்ற நன் நோக்கத்துடன் தான்.

ஆலயத்தில், ஆண்களும் பெண்களுமாக ஓரே கூட்டமாயிருந்தனர். மேடையில் பட்டாடை அணிந்த பண்டாரத் தம்பிரான், "யாக்கை நிலையாமை" என்பதைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது சிவனும் அவன் நண்பர்களும் அங்கு வந்து சேர்ந்தார்கள். மேடையின்மேல் சிவன் சென்று, ஒரு கேள்வித் தாளைத் தந்து இதற்குப் பதில் கூறுங்கள் என்று சொல்லிவிட்டுக் கீழே இறங்கி விட்டான்.

பார்த்தார் தம்பிரான். கையிலிருப்பது கேள்வித்தாள் என்பது தெரிந்ததும், அவர் உடல் முழுவதும் பூனைக் காய்ச்சல் இலைபட்டது போன்ற எரிச்சல்

ஏற்பட்டது. நான்
களுக்கு முன்னர்தாமே
யில் பதில் கூறமுடியா
லின் பின்புறமாக ஓ
னோம், இங்குமா
மடையவேண்டும் என்
ணியதும், தம்பிரானி
லிருந்து பாதம் வரைக்
ஆட்டம் கொடுத்தது.

சிங்கக் கூட்டத்திற்
யே சிக்கிய எருமை
ஏக்கமுற்றார் மிளமி
டத்தைப் பார்த்துவிட்
வான குரலில் கூறினா
"அன்பர்களே! உங்
வித்தாளைப் படித்துப்
தேன். மிக அருமை
கேள்விகள்தான், எ
இதற்குப் பதில்
கொள்ள வேண்டியது
யம்தான். நீங்கள்
வண்ணமே, முதலி
லும் சொல்லிவிடுவேன்
கேள்விகளைக் கேட்ட
விடையைச் சொல்லி
வீட்டிற்குப் போய்வி
என்று அஞ்சுகிறேன்.
நான் கூறப்போவதை
எளிய பக்திமான்
இருந்து கேளுங்கள்,
செயல்களை இந்தப்
கூறும்போது தாங்க
வர்களுடனிருந்து ப
தல்வேண்டும். கடை
றாமல் பதில் கூறுகிறே

இதைக் கூறி மு
தம்பிரான் முகத்தில்
தாக வியர்வை காண
அதைத் துடைத்துக்
சுண்டக் காய்ச்சி, சி
குமப் பூவுமிட்ட
வெள்ளிச் செம்பில்
துணியைத் திசையா
கினார்.

(9-ம் பக்கம் பா

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manim
at Free Printers 147, Coral Merchant St., Madras. JointEditor, M. Ilancheliyan B.